வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்.

ந.க.எண். 4576/அ1/2024 நாள்: 07.03.2024.

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப் பணி – இளநிலை உதவியாளர்/ தட்டச்சர்கள் ஆகியோர்களுக்கு உதவியாளர்களாக பதவி உயர்வு, பணிமாறுதல் வழங்குவது 15.03.2024 நிலவரப்படி தகுதி பெற்றவர்கள் – தற்காலிக முன்னுரிமை பட்டியல் வெளியிடுதல் – சார்ந்து

பார்வை : 1.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.013165/அ4/2024–1 நாள்: 01.03.2024
2.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.32756/ஆ4/இ3/2023 நாள்: 14.06.2023

&&&&&

பார்வையில் காணும் பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறையில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர்கள் பதவியிலிருந்து உதவியாளராக பணிமாறுதல் வழங்குவது சார்ந்தும் 15.03.2024 நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வு பெறுவதற்கு தகுதி வாய்ந்த நபர்கள் விவரம் கோரப்பட்டுள்ளது.

பார்வை 2இல் காணும் பள்ளிக்கல்வி இணை இயக்குநர் ( பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகளின்படி 16.03.2023 நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்விற்கு தகுதியான தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அப்பட்டியலில் பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களை தவிர்த்து அடுத்து உள்ள 103 நபர்களுக்கான பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. 15.3.2024 க்குதகுதி பெற்ற நபர்கள் ( பட்டியலில் கடைசியாக உள்ள பணியாளரைவிட பணியில் மூத்தவர்) மற்றும் 03 ஆண்டுகளுக்கு முன்னர் பதவி உயர்வினை தற்காலிகமாக துறந்தவர்கள் (Relinquishment) இருப்பின் அவர்களை **15.3.2024** தேர்ந்தோர் பட்டியலில் சேர்க்க ஏதுவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் விவரங்களை பெற்று அதன் தொகுப்பு பட்டியலில் விவரங்களை 11.03.2024 க்குள் அனுப்பிவைக்குமாறு அனைத்து அரசு/உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் (இடைநிலைகல்வி/தொடக்ககல்வி) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>மேலும் பட்டியலில் சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தங்கள் இருப்பின் அதன் விவரங்களையும் ( ஏற்கனவே 3 ஆண்டுகளுக்கு முன்னர் பதவி உயர்வினை துறந்தவர்கள் இருப்பின் அவர்களை சேர்க்கும் பொருட்டும்) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி–IV (2007 – 2008 மற்றும் 2012 – 2013 ஆம் ஆண்டிற்கானது) தேர்வு செய்யப்பட்டு 04.02.20213 அன்று பணிவரன்முறை</u>

செய்யப்பட்ட பணியாளர்களில் (தேர்வாணைய பட்டியலில் வரிசை எண்.400 வரையுள்ள) 15.03.2024 பட்டியலுக்கு தகுதி பெற்ற பணியாளர்கள் சார்பான விவரங்களை மட்டும் அனுப்பி வைக்க தெரிவிக்கப்படுகிறது.

இச்செயல்முறைகளை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுடுகிறது. இப்பொருள் சார்ந்து காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்றும், தகுதி வாய்ந்த பணியாளர்களின் பெயர் ஏதும் தொகுப்புப் பட்டியலில் விடுபட்டிருப்பின், அதற்கு சார்ந்த அலுவலர்களே முழுபொறுப்பேற்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

1) படிவம்
2) 103 நபர்களுக்கான தற்காலிக முன்னுரிமைப் பட்டியல்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர்
அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.